# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

**ஆணை நாள்: 05.09.2019 (முற்பகல்)**

**முன்னிலை**

**திரு ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,**

**மாநில தகவல் ஆணையர்**

...............

**வழக்கு எண்.SA4599/F/2019**

திருமதி கிரிஜா ... மேல்முறையீட்டாளர்

எதிர்

பொதுத் தகவல் அலுவலர்/
நேர்முக உதவியாளர்,
வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்,
ஆட்சியர் அஞ்சல்,
தருமபுரி - 636 705. ... பொது அதிகார அமைப்பு

பார்வை:-

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 30.04.2019 |
| முதல் மேல்முறையீட்டு நாள் - பிரிவு 19(1) | 08.05.2019 |
| மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு - பிரிவு 19(3) | 15.05.2019 |

******

# ஆணை

இன்று (05.09.2019) இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திருமதி கிரிஜா ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 7-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பின் சார்பாக ஒப்புதல் பெற்ற திரு த.அதியமான், உதவியாளர், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், தருமபுரி ஆஜரானார்.

2. மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 30.04.2019 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில், தருமபுரி சார்பு நீதிமன்றத்தில் நடைபெற்று

வரும் O.S.No.1/1989 என்ற வழக்கின் சொத்து விவரத்தில், C ஜாபிதாவில் தெரிவிக்கப்பட்டுள்ள அசையும் சொத்தான S.A.M.S பஸ் கம்பெனிக்கு சொந்தமான பேருந்துகளை பொது ஏலம்விட நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டதில், மேற்படி நீதிமன்ற ஆணையரான திரு C.ராஜேந்திரன், B.A.,B.L., அவர்கள் நீதிமன்ற ஆணையர் பணியை மேற்கொள்ளுவதற்காக மேற்படி S.A.M.S பஸ் கம்பெனிக்கு சொந்தமான பேருந்துகளை ஆய்வு செய்து தற்போதைய சந்தை மதிப்பு வழங்குமாறு தங்கள் அலுவலகத்திற்கு கடந்த 18.03.2019-ல் பதிவு தபால் அனுப்பியுள்ளதாகவும், இது தொடர்பாக உடனடியாக நீதிமன்றத்திற்கு தகவல் தெரிவிக்க வேண்டியுள்ளதால், மேற்படி கடிதத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தினசரி நடவடிக்கை விவரம் தகவலாக வழங்கக் கேட்டு, நேர்முக உதவியாளர் மற்றும் பொதுத் தகவல் அலுவலர், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், ஆட்சியர் அஞ்சல், தருமபுரி என விலாசமிட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. மேல்முறையீட்டாளர் தான் கோரிய தகவல்கள் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படவில்லை என தெரிவித்தும், தான் கோரிய உரிய தகவல்களை அளிக்க கேட்டும், 08.05.2019 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவை பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு அலுவலருக்குத் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தகவல் வழங்கவில்லை என தெரிவித்தும், முழுமையான தகவல்களை அளிக்க ஆணையிட கேட்டும், பிரிவு 19(3)ன் கீழ் 15.05.2019 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டாளர் இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்த இரண்டாவது மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளர் கோரிய தகவல் தொடர்பாக 21.05.2019 மற்றும் 03.06.2019 தேதியிட்டு தகவல் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, உரிய ஆவணங்களை ஆணையத்தில் சமர்ப்பித்தார்.

5. மேல்முறையீட்டாளரின் மனுவையும், பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவலையும் ஆணையம் பரிசீலனை செய்ததில், மேல்முறையீட்டாளருக்கு முழுமையான தகவல் வழங்கப்படவில்லை என தெரிய வருகிறது. விசாரணையின் முடிவில் ஆணையம் கீழ்கண்ட உத்தரவு வழங்குகிறது:

> **மனுதாரர்/மேல்முறையீட்டாளர் 30.04.2019 தேதியிட்ட மனுவில் கோரிய முழுமையான தகவல்களை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 7 தினங்களுக்குள் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 7(6)ன்படி கட்டணமின்றி பதிவுத் தபாலில் அனுப்பி வைத்து, வழங்கப்பட்ட தகவல் மற்றும் மேல்முறையீட்டாளர் ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலை இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்க தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.**

**ஒம்/- ச.த. தமிழ்குமார்**
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

**<u>வழக்கு எண்.SA4599/F/2019</u>**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/
நேர்முக உதவியாளர்,
வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்,
ஆட்சியர் அஞ்சல்,
தருமபுரி - 636 705.

**<u>மனுதாரர்/ மேல்முறையீட்டாளர்</u>**

திருமதி கிரிஜா,
க/பெ லேட். குப்புசாமி,
எண்.38, வாணியர் தெரு,
பொன்னாகரம் அஞ்சல் & வட்டம்,
தருமபுரி மாவட்டம் - 636 810.

**Copy to: Judgement File/ Spare**

**AM/PS - 170919**